Registered as a Newspaper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM　மக்கள் தினசரி　Peoples Daily

நாதம் 04　திருவள்ளுவர் ஆண்டு 2024　மார்கழி 01　(16-12-93)　வியாழக்கிழமை　ஓசை 301

## தமிழீழ இலக்கத்தகடு இல்லாத ஊர்திகள் மீது சட்ட நடவடிக்கை

எதிர்வரும் 24-ம் திகதி முதல் தமிழீழ அடையாள இலக்கத் தகடு, வரி அட்டையின்றி ஊர்திகளை வீதியில் பாவிப்பவர்கள் மீது தமிழீழ காவல் துறையினர் சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளனர். இது குறித்து தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் விடுத்த செய்திக் குறிப்பில் தமிழீழ பிரதேசத்தில் உள்ள மோட்டார் ஊர்தி உரிமையாளர்கள் அனைவரும் தமது ஊர்திகளை போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் கடந்த சித்திரை 21-ந் திகதி தொடக்கம் ஐப்பசி 30-ந் திகதிக்குட்பட்ட காலப்பகுதிக்குள் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டிருந்தனர். ஆகவே சகல மோட்டார் ஊர்திகளும் தமிழீழ அடையாள இலக்கத்தகடு பொருத்தப்பட்டிருத்தல்

(4ஆம் பக்கம் பார்க்க)

# ‘அமைதிப்படைப் பாணி’ தேர்தலே கிழக்கில் இன்று நடாத்த முடியும்!

## மட்டு. அரச அதிபர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு நிலைமை நிச்சய மில்லாது உள்ளதால் ஜனநாயகமான ஒரு தேர்தலை இங்கு நடத்துவது இப்போதைக்குச் சாத்தியமில்லை. தேர்தலை வைப்பதானால் இந்திய ‘அமைதிப்படைப்பாணி’யிலேயே நடத்தலாம். சுதந்திரமான, நியாயமான தேர்தலை நடத்துவதென்றால் நிலைமை சீரடையும் வரை பொறுத்திருக்க வேண்டும் என மட்டக்களப்பு அரச அதிபர் மௌன குருசாமி தெரிவித்தார்.

‘ஜலண்ட்’ பத்திரிகைக்கு அவர் வழங்கிய பேட்டியின் போது மேலும் தெரிவிக்கையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பகுதிகளில் விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக இராணுவத்தினர் இன்னமும் தெரிவிக்கின்றனர் என்றார்.

மேலும் அண்மையில் கிழக்கிற்கு விஜயம் செய்த அகதிகளின் புனர்வாழ்வு தொடர்பான அமைப்புக்களை மட்டக்களப்பு நகருக்கு வெளியே செல்ல வேண்டாம் என அரச அதிபர் அறிவுறுத்தியதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப் பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 17 அகதிமுகாம்களில் ஒன்று மட்டுமே மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மட்டக்களப்பு அரச அதிபருக்கும் அகதிகள் புனரமைப்பு பணியில் ஈடுபட்டுள்ள அமைப்புகளுக்கும் இடையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய பொலிஸ் அதிகாரி ஒருவர் கருத்துக்கூறுகையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் 5000 பொலிசார் நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும் இராணுவத்தின் உதவியுடன் தேர்தலை நடத்திவிடலாம் என தெரிவித்தார்.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## இடைவிடாது விமானங்கள் பறப்பு

சிறிலங்கா வான்படைக்குச் சொந்தமான குண்டுவீச்சு விமானங்கள் குடாநாட்டின் வான்பரப்பில் பரவலாக அடிக்கடி பறந்து செல்வதை நேற்றுக் காலை முதல் நண்பகல்வரை காணக்கூடியதாக இருந்தது.

இவ் விமானங்கள் யாழ். நகரப் பகுதியை மையமாகக் கொண்டு வலிமேற்கு, வடக்கு, தெற்குப் பகுதிகளின் வான்பரப்பில் அடுத்தடுத்து செல்வதோடு சில இடங்களில் தாழப்பறந்தும் சென்றன.

## பிரதேச செயலக பிரிவுகளில் தேசிய பாடசாலைகள் அமையும்

### அமைச்சர் லொக்குபண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய தேவைக்கு பொருந்தக் கூடிய வகையில் கல்வித்துறையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டபிள்யு. ஜே. எம். லொக்குபண்டார தெரிவித்தார்.

கல்விஉயர்கல்வி கலாசார விவகார அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக குழுநிலையில் நடைபெற்ற விவாதத்தின் போது உரை நிகழ்த்திய அமைச்சர் அனைவருக்கும் கல்விவழங்க வேண்டும் என்ற நோக்கில் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் ஒவ்வொரு தேசிய பாடசாலை அமைக்கப்படவுள்ளதாகவும் தகுதியுள்ள மாணவர்கள் அத்தகைய பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என

(4ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளுக்கு 6கோடி தமிழர் ஆதரவு

### அமெரிக்க பத்திரிகை தெரிவிப்பு

இலங்கையில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு தமிழகத்தில் உள்ள ஆறு கோடி தமிழ் மக்களும் ஆதரவளிப்பதாக அமெரிக்க பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது

தனிநாட்டிற்காக போரிடும் விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு அருகில் அமைந்துள்ள தமிழ்நாட்டின் ஆறு கோடி தமிழர்களும் ஆதரவளிப்பதாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவிலிருந்து வெளிவரும் ஹேரால்ட்

## பிரேமாவின் தவறான நடவடிக்கையே இன்றைய நிலைக்கு காரணம்

### காமினி திசநாயக்கா குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாச அன்று எடுத்த தீர்க்கதரிசனமற்ற முடிவே இன்று இராணுவத்திலுள்ள சிங்கள ‘அப்பாவி’ இளைஞர்கள் தமது உயிரை இழக்க கார

மாதங்களில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவோம் என அரசாங்கம் கூறியது. இன்று எத்தனை மூன்று மாதங்கள் சென்றுவிட்டன?

நாளாந்தம் பலம்பெற்று தாக்குதல்களை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள்.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## 600 உயர் அதிகாரிகள் மீது மனித உரிமை குற்றச்சாட்டு

இவ்வருடம் ஜனவரி முதல் ஒக்டோபர் வரையிலான காலப்பகுதியில் சிறிலங்கா அரசு மீது சுமார் 1135 மனித உரிமை மீறல் தொடர்

குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இம் முறைப்பாடுகளில்பதவி உயர்வுகள் கிடைத்துள்ள

குருசாமி தெரிவித்தார்.

'ஐலண்ட்' பத்திரிகைக்கு அவர் வழங்கிய பேட்டியின் போது மேலும் தெரிவிக்கையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பகுதிகளில் விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக இராணுவத்தினர் இன்னமும் தெரிவிக்கின்றனர் என்றார்.

மேலும் அண்மையில் கிழக்கிற்கு விஜயம் செய்த அகதிகளின் புனர்வாழ்வு தொடர்பான அமைப்புக்களை மட்டக்களப்பு நகருக்கு வெளியே செல்ல வேண்டாம் என அரச அதிபர் அறிவுறுத்தியதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப் பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 17 அகதிமுகாம்களில் ஒன்று மட்டுமே மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மட்டக்களப்பு அரச அதிபருக்கும் அகதிகள் புனரமைப்பு பணியில் ஈடுபட்டுள்ள அமைப்புகளுக்கும் இடையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய பொலிஸ் அதிகாரி ஒருவர் கருத்துக்கூறுகையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் 5000 பொலிசார் நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும் இராணுவத்தின் உதவியுடன் தேர்தலை நடத்திவிடலாம் என தெரிவித்தார்.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

பொருந்தக் கூடிய வகையில் கல்வித்துறையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டபிள்யு. ஜே. எம். லொக்குபண்டார தெரிவித்தார்.

கல்விஉயர்கல்வி கலாசார விவகார அமைச்சிற்கான விவாதத்தின் போது உரை நிகழ்த்திய அமைச்சர் அனைவருக்கும் கல்விவழங்க வேண்டும் என்ற நோக்கில் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுள்ளதாகவும் தகுதியுள்ள மாணவர்கள் அத்தகைய பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என

(4ஆம் பக்கம் பார்க்க)

# 600 உயர் அதிகாரிகள் மீது மனித உரிமை குற்றச்சாட்டு

இவ்வருடம் ஜனவரி முதல் ஒக்டோபர் வரையிலான காலப்பகுதியில் சிறிலங்கா அரசு மீது சுமார் 1135 மனித உரிமை மீறல் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இது குறித்து ஆராயும் மனித உரிமைகள் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இம் முறைப்பாடுகளில்பதவி உயர்வுகள் கிடைத்துள்ள பொலிஸ் அதிகாரிகள் உட்பட சுமார் 600உயர் அதிகாரிகள் சம்பந்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# பிரேமாவின் தவறான நடவடிக்கையே இன்றைய நிலைக்கு காரணம்

## காமினி திசநாயக்கா குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாச அன்று எடுத்த தீர்க்கதரிசனமற்ற முடிவே இன்று இராணுவத்திலுள்ள சிங்கள 'அப்பாவி' இளைஞர்கள் தமது உயிரை இழக்க காரணமாக உள்ளது என ஜனநாயக ஐக்கிய முன்னணித் தலைவர் காமினி திசநாயக்கா கூறியுள்ளார்.

இந்திய இராணுவம் வெளியேற்றப்படும் போது மூன்று மாதங்களில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவோம் என அரசாங்கம் கூறியது. இன்று எத்தனை மூன்று மாதங்கள் சென்றுவிட்டன? இன்னும் யுத்தம் முடியவில்லை.

விடுதலைப் புலிகள் பலவீனம் அடைந்துவிட்டார்கள் என்றனர். ஆனால் அவர்கள் நாளாந்தம் பலம்பெற்று தாக்குதல்களை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள்.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# விடுதலைப்புலிகளுக்கு 6கோடி தமிழர் ஆதரவு

## அமெரிக்க பத்திரிகை தெரிவிப்பு

இலங்கையில் உள்ளதமிழீழ விடுதலைப்புலிகளுக்கு தமிழகத்தில் உள்ள ஆறு கோடி தமிழ் மக்களும் ஆதரவளிப்பதாக அமெரிக்க பத்திரிகை ஒன்றுதெரிவித்துள்ளது

தனிநாட்டிற்காக போரிடும் விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு அருகில் அமைந்துள்ள தமிழ்நாட்டின் ஆறு கோடி தமிழர்களும் ஆதரவளிப்பதாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவிலிருந்து வெளிவரும் ஹேரால்ட் ட்ரிபியூன் என்னும் பத்திரிகையே இவ்வாறு தெரிவித்துள்ளது.

### வடக்கு - கிழக்கு மாகாணங்களில்

# இனப்பிரச்சினையே உள்ளது என சிங்கள மக்கள் ஏற்கவேண்டும்

## காமினி நவரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பிரச்சினையை ஒரு தேசிய இனப் பிரச்சினை என்பதனை முதலில் சிங்கள மக்கள் முற்று முழுதாக ஏற்கவேண்டும். இதன்பின்னரே இதற்கான தீர்வை நோக்கி நாம் முன்னேற முடியும் என முன்னாள் 'சற்றடே ரிவியூ' ஆசிரியர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், யுத்தம் இன்று உச்சக்கட்ட நிலையை அடைந்துள்ளது. இதனால் சிறிலங்காவின்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# இன்று முதல் படகுச்சேவை

கிளாலி - பூநகரி பயணிகள் படகுச்சேவை இன்று முதல் வழமையான நேரத்திற்கு நடைபெறும்என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

### வடக்கு - கிழக்கு பிரச்சினை குறித்து

# ஐரோப்பிய சமூக தூதுக்குழு ஜனாதிபதியுடன் விவாதிப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகள் ஒன்றியத்தை சேர்ந்த நாடுகளின் 12 தூதுவர்களைக்கொண்ட குழுவொன்று கொழும்பில் ஜனாதிபதி விஜேதுங்கவை சந்தித்து வடக்கு - கிழக்கு பிரச்சினை குறித்து விவாதித்தது.

நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இப்பேச்சுகளின் போது வடக்கு - கிழக்கு நிலைமை, மனித உரிமை மற்றும் பொருளாதாரம் குறித்து ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வந்த இந்த ஐரோப்பிய தூதுக்குழு முன்னதாக வெளியுறவு அமைச்சர் ஏ. சி எஸ் ஹமீத்துடனும் தற்போதைய நாட்டின் நிலைமை குறித்து ஆராய்ந்தது.

பிரிட்டன், டென்மார்க்,

( 4 ஆம் பக்கம் பார்க்க )

### கௌதம புத்தர் காலத்தில்

# சிறிமா ஆட்சியிலிருந்தால் புத்தசமயம் பரவியிராது

(கொழும்பு)

திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா 2500 ஆண்டுகளுக்கு முன் ஆட்சி செய்திருந்தால் கௌதம புத்தர் கூட தம்மசக்ரபத்ர சூத்ரவை ஐந்து பௌத்த துறவிகளுக்கு உபதேசித்திருக்க முடியாது என சிறிலங்கா பிரதமர் ரணில்விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மொரட்டுவை பிரின்ஸ் ஒவ் வேல்ஸ் கல்லூரியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசியபிரதமர், திருமதி பண்டாரநாயகாவின் ஆட்சிக் காலத்தில் பத்திரிகை சுதந்தி

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# பூநகரியில் பலியான படையினருக்கு இம்மாத இறுதி வரை அஞ்சலி

## கொழும்பில் பொதுநிகழ்வுகளுக்கு தடை

(கொழும்பு)

பூநகரியில் பலியான சிறிலங்கா படையினருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இன்று முதல் இம்மாத இறுதி வரை கொழும்பில் பொது இடங்களில் விழாக்கள் நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

வரும் இருவார காலத்தை பூநகரியில் மரணமடைந்த படையினருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் எளிமையான காலமாக அனுஷ்டிக்கும்படி கொழும்பு மேயர் உத்தரவிட்டுள்ளார். தலைநகரில் இத்தகையதோர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த வாரம் கொண்டாடப்படவுள்ள நத்தார் தினத்திற்கு முன்பாக இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

# உயர்கல்வி அமைச்சராக அநுரா நாளை பதவி ஏற்பு

(கொழும்பு)

அநுரா பண்டாரநாயக்கா நாளை உயர்கல்வி அமைச்சராக பதவி ஏற்கவுள்ளார். நாளை ஜனாதிபதி விஜேதுங்க தலைமையில் நடைபெறும் வைபவம் ஒன்றில் இவரின் பதவி ஏற்பு நடைபெறும் எனஒப்சேர்வர் பத்திரிகைசெய்தி வெளியிட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியிலிருந்து இரு மாதங்களின் முன் வெளியேறிய அநுரா தமக்கு அரசில் பெரிய பொறுப்பு தரவேண்டும் என கேட்டிருந்தார். உயர்கல்விக்கு போட்

(4ஆம் பக்கம் பார்க்க)

# வேலைவாய்ப்பு முகவர்கள் 30 மில்லியன் ரூபா மோசடி

வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி கொழும்பில் இயங்கும் வேலை வாய்ப்பு முகவர்களினால் கடந்த 11 மாத காலத்தில் 30 மில்லியன் ரூபா மோசடிசெய்யப்பட்டுள்ளதாகக் கொழும்பு குற்றப் புலனாய்வுத்துறைப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வேலைவாய்ப்புத் தேடிய 215 பேரிடமிருந்து இப்பணம் பெறப்பட்டுள்ளது. 178 வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் இவ்வாறு மோசடியில் ஈடுபட்டுள்ளன. இவற்றில் 80 முகவர்கள் தலைமறைவாகிவிட்டனர்.

இவர்கள் இத்தாலிக்கப்பல்கள், பிரான்ஸ், ஜேர்மனி ஜப்பான், கனடா, ரஷ்யா, மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக்கூறி இம்மோசடியில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மாநகரசபை வரவு-செலவு

1994ஆம் ஆண்டிற்குக் கிடைக்கக்கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும் உத்தேச செலவின விபரங்களையும் உள்ளடக்கிய யாழ். மாநகராட்சி மன்ற வரவு செலவுத்திட்டம் இன்று முதல் 7 நாட்களுக்கு பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என யாழ் மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

# தொழிலாளர் பிரச்சினை குறித்து அரசுடனான பேச்சுக்கள் முறிந்தன

## அமைச்சர் தொண்டமான் அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சியுடன் இதுவரை தொழிலாளர் பிரச்சினை தொடர்பாக நடாத்திவந்த பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து விட்டன என இலங்கை தொழிலாளர்காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

20 வருடங்களுக்கு மேலாக தொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பாக நடாத்தி வந்த பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து விட்டன. இனி மேல் அரசியல் விடயங்கள் மட்டுமே பேசப்படும் என வெரித்தாஸ் வானொலி சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தான் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளதாகவும் ஆனால் மத்திய மாகாணசபை குறித்து எதுவும் பேசவில்லை எனவும் தெரிவித்தார்,

மந்திரி சபைக் கூட்டங்களுக்கு தான் நாட்டில் இல்லாமையினால் கலந்து கொள்ளவில்லை என தெரிவித்த அவர் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டதாகவும் கூறினார்.

சிறிமாவுடனான சந்திப்பை ஏற்றுக் கொண்ட அவர் அது சாதாரண முறையில் இடம் பெற்றதுஎனவும் அதன்போது

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# வரி விளம்பரம்

### 5-ம்ஆண்டு புலமைப் பரிசில் வகுப்பு

புதிய பிரிவு ஆரம்பம் 18-12-1993 சனிக்கிழமை 2.00 மணி கணிதம், தமிழ் திரு. கனகசபை(ஓய்வுபெற்ற அதிபர்) கடந்த காலங்களில் சிறந்தபெறுபேறுகளை பெற்றுத் தருகின்ற ஓர் நிறுவனம் இதுவே புதிய அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும் பாரதி கல்வி நிலையம்- சித்தன்கேணி (6891)

### கடிகாரங்களா? றேடியோவா?

நல்ல நிலையில் உள்ள கடிகாரங்கள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். விற்கப்படும் சகல கடிகாரங்கள் றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோவேக்ஸ்(Dilka Watch & Radio Works) ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகில்) கிளை - கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-8129)

### பசன் பழம் தேவை

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களை (Passion Fruit) நாம் கொள்வனவு செய்கின்றோம். TASTE LINE INDUSTRIES (PVT) LTD, 14, Seeniar Lane Jaffna. (சி-8096)

### துளிர்

தமிழ்நாடு, புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர் அறிவியல் இதழ். கிடைக்கும் இடம் வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (6861)

### விற்பனைக்கு

பொம்மேரியன் இரண்டு மாதம் குட்டிகள் விற்பனைக்கு உண்டு ஆர். எஸ். கே. பாம் முருகபதி, உடுவில், சுன்னாகம். R.S.K FARM Murugapathy, Uduvil Chunnakam. (6898)

### வீடு விற்பனைக்கு

நீர்வேலி, பருத்தித்துறை பிரதான வீதியில் 4 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி வ. கார்த்திகேசபிள்ளை 6-வது மைல் கட்டை நீர்வேலி தெற்கு, நீர்வேலி. (6900)

### கலண்டர் டயறி வகைகள்

லீலா கலண்டர், சகல விதமான டயறி வகைகள், கிறிஸ்மஸ் காட், அன்பளிப்பு அடிப்பதற்குரிய கலண்டர் மொத்தமாகவும் சில்லறையாகவும் மக்மிலன், ஸ்ரீகாந் புத்தக சாலைகள் யாழ்ப்பாணம். (சி-8112)

### இந்தியா டுடே

இலங்கை ஏஜண்டான P.S. சுந்தரம் அன்சன்ஸ் அவர்களால் தமிழீழத்தில் ஏஜண்டாக எம்மை நியமித்துள்ளார்கள். வாசகர்களின் நன்மை கருதி விலை குறைத்துள்ளோம். மக்மிலன், ஸ்ரீகாந் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (சி-8111)

---

## யாழ்ப்பாண மாநகரசபை

# கேள்வி அறிவித்தல் – 1994

### சந்தைகள் இறைச்சிக்கடைகள்

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்கள் உட்பட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழிக்கடை ஆகியவற்றை இவ் அட்டவணையில் குறிப்பிடப்படும் காலங்களுக்கு 01. 01. 1994 முதல் குத்தகைக்கு கொடுப்பதற்கென அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் என்னால் 24 12 93 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்கள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணையும் கேள்விப்படிவக் கட்டணம் ரூ. 100/- உம் செலுத்துவதன் பேரில் 23.12 93 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிவரையும் யாழ்ப்பாண மாநகர சபை நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்கள் ''......................சந்தை/கடைக்கான கேள்வி'' என எழுதப்பட்ட கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 24.12.1993ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக சேர்க்கப்படல் வேண்டும்.

கேள்விகள் சம்பந்தமான மேலதிக விபரங்களை யாழ்ப்பாண மாநகர சபை நானாவித இறைவரிக் கிளையில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம். தபாலில் அனுப்பப்படுமாயின் அதனால் ஏற்படும் தாமதங்களுக்கு மாநகர சபை பொறுப்பேற்கமாட்டாது

கேள்விகள் 24 12 1993 பிற்பகல் 2 30 மணிக்கு திறந்து ஆராயப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமாக இருக்கலாம்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

---

# ஓராண்டு இதய அஞ்சலி



மலர்வு
25.10.1937

மறைவு
16.12.1992

அமரர்
## A. K. குணசிங்கராசா
(முன்னாள் விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்)

மறைந்தும் மறையாத எங்கள் பிரிய அப்பா, எங்கோ சென்றுவிட்டீர்கள் நாம் இங்கிருந்து அழுது புலம்புகின்றோம். தங்கள் நினைவலைகள் எங்கள உணர்வலைகளில் என்றும் நிறைந்திருக்கும் சிம்மக் குரலோன்! தத்துவப் பேராசான்!! என்று உலகம் உங்களைப் புகழ்ந்தது.

மறுபிறவி உண்டென்றால் நல்லதொரு இடத்தில் பிறந்து இப்பிறவியில் விட்டுச்சென்ற கல்வியைத் தொடர்ந்து கற்றோனாகி தங்களுக்கும் பயனாகி மற்றவர்களுக்கும் பயனாகி வாழவேண்டும் என்றும் தங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இதயபூர்வமாகப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, மகள்,
குடும்பத்தினர்

கங்காபதி,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை. (சி-8125)

---

# 3-ம் ஆண்டு நினைவுகளில்




## அமரர் செல்லையா குமாரலிங்கம்
(இளைப்பாறிய தபாலதிபர்)

தோற்றம்

---

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை தேவதாஸ் (யோசப்)
(யோசப்நாயகம் அன்ரன் தேவராஜா)

பிறப்பு
17.03.1959

வீரச்சாவு
16.12.1986

பாரினிலே தமிழர் பாங்குடனே வாழ
போரிடுவோம் நாங்கள் தமிழ் ஈழமதை மீட்க
கூறிநின்ற கூட்டமதில் மகிழ்வுடனே கூடி
சென்றிருந்தாய் போர்க்களம்தான்
பகைவர்களை விரட்ட, மக்களுக்கும்
விடுதலையின் அவசியத்தை விளக்கி நின்றாய்
வரலாறாய் ஆகிவிட்டாய் தமிழீழ சரித்திரத்தில்
உன் கனவு நனவாக ஆகும்வரை முயன்றுநிற்போம்

(6904) -குடும்பத்தினர்

---

# நினைவு கூருகின்றோம்...
## 1993-12-16

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு-கஞ்சிகுடிச்சாறுப்பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். கல்கி** (சாமித்தம்பி குகநாதன் காரைதீவு-அம்பாறை)

யாழ்-குருநகரில் எதிர்பாராதவிதமாகக் கைக்குண்டு வெடித்ததில் எமைப்பிரிந்த, குருநகர் பிரதேசப் பொறுப்பாளர்,

**தேவதாஸ்** (ஜோசப் அன்ரன் தேவராஜா - குருநகர்-யாழ்)

**சீலன்** (நாகரத்தினம் நவரத்தினராஜா - இராசாவின் தோட்டம்வீதி-யாழ்)

1987ஆம் ஆண்டு அம்பாறை, காரைதீவுப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**லெப். விக்ரம்** (சண்முகம் முத்துராமன் - சேனைக்குடியிருப்பு - கல்முனை)

மன்னார்-விடத்தல்தீவுப்பகுதியில் ரெலோ முகாம் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். முருகேசு** (மருசால் நீக்கலஸ் - கன்னாட்டி, அடம்பன் மன்னார்)

**லுக்மன்** (சௌந்தரராஜன் கொன்சன்டேவிற்- நானாட்டான்-மன்னார்)

1988ஆம் ஆண்டு அல்வாய், நாவலடிப்பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகளுடனான சமரின்போது விழுப்புண் அடைந்த நிலையில் தனது கைக்குண்டை வெடிக்கவைத்து வீரச்சாவெய்திய,

**மோகன்** (சோதிலிங்கம் சிவலிங்கம்-அல்வாய்தெற்கு)

இதேசம்பவத்தின்போது சயனைட் உட்கொண்டு உயிர்நீத்த நாட்டுப்பற்றாளரான,

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்கள் உட்பட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழிக்கடை ஆகியவற்றை இவ் அட்டவணையில் குறிப்பிடப்படும் காலங்களுக்கு 01. 01. 1994 முதல் குத்தகைக்கு கொடுப்பதற்கென அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் என்னால் 24 12 93 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்கள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணையும் கேள்விப்படிவக் கட்டணம் ரூ. 100/- உம் செலுத்துவதன் பேரில் 23.12 93 வியாழக்கிழமை பிற்பகல் 3 00 மணிவரையும் யாழ்ப்பாண மாநகர சபை நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்கள் '' .................... .....சந்தை/கடைக்கான கேள்வி'' என எழுதப்பட்ட கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 24.12.1993ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக சேர்க்கப்படல் வேண்டும்.

கேள்விகள் சம்பந்தமான மேலதிக விபரங்களை யாழ்ப்பாண மாநகர சபை நானாவித இறைவரிக் கிளையில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம் ...பாலில் அனுப்பப்படுமாயின் அதனால் ஏற்படும் தாமதங்களுக்கு மாநகர சபை பொறுப்பேறகமாட்டாது

கேள்விகள் 24 12 1993 பிற்பகல் 2 30 மணிக்கு திறந்து ஆராயப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமாக இருக்கலாம்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
14 12.1993

| குத்தகை விபரம் | குத்தகைக் காலம் | கேள்விப்பிணை | நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மாத வாடகை |
|---|---|---|---|---|
| **1. கொட்டடி ஆட்டிறைச்சிக் கடை** | | | | |
| கடை இல. 02 | 1 வருடம் | 2500.00 | 6000.00 | 112.50 |
| **2. குருநகர் மாட்டிறைச்சிக் கடைகள்** | | | | |
| கடை இல. 01 | 1 வருடம் | 2500.00 | 50000.00 | 195 00 |
| ,, 02 | 1 வருடம் | 2500 00 | 21000.00 | 195.00 |
| ,, 03 | 1 வருடம் | 2500 00 | 34500 00 | 195.00 |
| ,, 04 | 1 வருடம் | 2500.00 | 24000.00 | 195.00 |
| ஆட்டிறைச்சிக் கடை 07 | 1 வருடம் | 2500.00 | 14000.00 | 195.00 |
| **3 நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடைகள்** | | | | |
| கடை இல. 01 | 1 வருடம் | 2500 00 | 7000.00 | 200.00 |
| ,, 02 | 1 வருடம் | 2500.00 | 6000.00 | 200.00 |
| ,, 03 | 1 வருடம் | 2500 00 | 5000 00 | 200.00 |
| ,, 07 | 1 வருடம் | 2500.00 | 5000.00 | 200,00 |
| **ஆட்டிறைச்சிக் கடைகள்** | | | | |
| கடை இல. 08 | 1 வருடம் | 2500 00 | 5000.00 | 200 00 |
| ,, 09 | 1 வருடம் | 2500 00 | 5300 00 | 200.00 |
| **கோழிக்கடை** | | | | |
| கடை இல. 10 | 1 வருடம் | 2500.00 | 5 000.00 | 200.00 |
| **4. பாசையூர் மாட்டிறைச்சிக் கடை** | | | | |
| கடை இல. 03 | 1 வருடம் | 2500 00 | 24900.00 | 135.00 |
| **அரியாலை மாட்டிறைச்சிக் கடை** | | | | |
| | 1 வருடம் | 2500,00 | 16000.00 | 135.00 |
| **புங்கங்குளம் ஆட்டிறைச்சிக் கடை** | | | | |
| | 1 வருடம் | 2500.00 | 10000.00 | 200.00 |
| **,, மாட்டிறைச்சிக் கடை** | | | | |
| | 1 வருடம் | 2500 00 | 19000.00 | 200 00 |
| **சந்தைகள்** | | | | |
| 1. பெரியகடை மரக்கறிச் சந்தை | | | | |
| | 1 வருடம் | 5000.00 | 75000.00 | |
| 2. குருநகர் சந்தை | | | | |
| | 1 வருடம் | 5000 00 | 125000.00 | |
| 3. செங்குந்தா சந்தை | | | | |
| | 1 வருடம் | 5000.00 | 200000.00 | |
| 4. நாவாந்துறை சந்தை | | | | |
| | 1 வருடம் | 2500 00 | 40000.00 | |
| 5. பாசையூர் சந்தை | | | | |
| | 1 வருடம் | 2500.00 | 30000 00 | |

(சி-8133)

## 3-ம் ஆண்டு நினைவுகளில்



## அமரர் செல்லையா குமாரலிங்கம்

**(இளைப்பாறிய தபாலதிபர்)**

தோற்றம் **12-12-1928**

மறைவு **21-12-1990**

**திதி: 16-12-1993**

உறவுகள் தூரத்தே சென்றிடினும்
உணர்வுகள் எம்மிடத்தே நிலைப்பதனால் -உங்கள்
நினைவுகளில் மிதக்கின்றோம்
துயரத்திடமே தோழமை கொள்கின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. (6889) - குடும்பத்தினர்

## ஓராண்டு கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
30.10.1944

மறைவு
28.11.1992

திதி
16.12.1993

## பூ. ஜீவா

அன்புள்ள அப்பா,
நீங்கள் மறைந்து ஆண்டொன்று ஆகுதப்பா
ஆறவில்லை எம் நெஞ்சு
ஆறுதல்சொல்ல யாருமில்லாது
தவிக்கின்றோம் அப்பா
இவ்வுலகில் உங்களைப் போல்
யார் வருவார் அப்பா?

உங்கள் ஆத்மா சாந்தியடைய அம்பாளை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்,
அன்பு மனைவி, பிள்ளைகள்,
ஆனைப்பந்தி மருமகன், பேரப்பிள்ளைகள்.
(6901)

குண்டு வெடித்ததில் எமைப்பிரிந்த, குருநகர் - பிரதேசப் பொறுப்பாளர்,

**தேவதாஸ்** (ஜோசப் அன்ரன் தேவராஜா - குருநகர்-யாழ்)

**சீலன்** (நாகரத்தினம் நவரத்தினராஜா - இராசாவின் தோட்டம்வீதி-யாழ்)

1987ஆம் ஆண்டு அம்பாறை, காரைதீவுப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**லெப். விக்ரம்** (சண்முகம் முத்துராமன் - சேனைக்குடியிருப்பு - கல்முனை)

மன்னார்-விடத்தல்தீவுப்பகுதியில் ரெலோ முகாம் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். முருகேசு** (மருசால் நீக்கலஸ் - கன்னாட்டி, அடம்பன் மன்னார்)

**லுக்மன்** (சௌந்தரராஜன் கொன்சன்டேவிற்-நானாட்டான்-மன்னார்)

1988ஆம் ஆண்டு அல்வாய், நாவலடிப்பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகளுடனான சமரின்போது விழுப்புண் அடைந்த நிலையில் தனது கைக்குண்டை வெடிக்கவைத்து வீரச்சாவெய்திய,

**மோகன்** (சோதிலிங்கம் சிவலிங்கம்-அல்வாய்தெற்கு)

இதேசம்பவத்தின்போது சயனைட் உட்கொண்டு உயிர்நீத்த நாட்டுப்பற்றாளரான,

**மஞ்சுளாதேவி கனகரத்தினம்** (நாவலடி-அல்வாய் வடக்கு)

மன்னார்-பண்டிவிரிச்சானில் தவறுதலாக எமது பொறிவெடியில் சிக்கியதில் தன்னைத்தானே சுட்டு எமைப்பிரிந்த,

**அன்னக்கிளி** (பிரான்சிஸ் செபஸ்ரின் பூநகரி-மன்னார்)

1990ஆம் ஆண்டு மட்டு-புல்லுமலையில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த,

**வசந்த்** (சீனித்தம்பி துரை-புல்லுமலை-மட்டு)

வேலணைப்பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டுவீச்சில் கொல்லப்பட்ட பெண்குழந்தை, தாய் மற்றும் ஒரு சிறுவன் உட்பட 04 பொதுமக்கள்,

1991ஆம் ஆண்டு மன்னார் - அரிப்புப் பகுதியில் இராணுவத்தினரின் பொறிவெடியில் சிக்கிப்பலியான தமிழ்ப்பொதுமகன்.

1992ஆம் ஆண்டு கிளாலிக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினருடனான நேரடிச் சமரின் போது வீரச்சாவெய்திய-

**கப்டன் புரலவன்-சசாங்கன்** (வெள்ளைக்குட்டி பூபாலப்பிள்ளை - தம்பலவத்தை, மண்டூர்-மட்டு)

**கப்டன் மகேஸ்** (மகேஸ்வரன் அருள்ராஜ் - உறுகாமம், கரடியனாறு-மட்டு)

**மேஜர் பூபால்** (சிவசுப்பிரமணியம் சிவகுமார்-கிறீன்வீதி - திருமலை)

**கப்டன் மகேஸ்வரன்-மகேஸ்** (குலசிங்கம் ஸ்ரீபன் டெல்மன் - உவர்மலை - திருமலை)

**கடற்புலி கப்டன் அறிவழகன்** (சந்தியாப்பிள்ளை யோன்சன் றெஜீஸ் - கடற்கரை வீதி, மன்னார்)

**கடற்புலி லெப். கலியுகன்-சலீம்** (சச்சிதானந்தம் கிருஷ்ணகுமார் - வல்லை வீதி, அச்சுவேலி - யாழ்)

**கடற்புலி லெப். வெற்றி** (நடராசா சுப்பிரமணியம் - மணற்காடு, குடத்தனை, வடமராட்சி கிழக்கு)

யாழ் - விளான் பகுதியில் முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். சிற்றம்பலம்-அப்துல்லா** (நடராசா சந்திரகுமார் - தம்பலகாமம் - திருமலை)

வவுனியா இராணுவ தலைமை அலுவலகத்தில் தடுத்து வைத்திருந்து சித்திரவதை மூலம் கொல்லப்பட்ட தமிழிளைஞர்

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**
**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8135)

சிந்தனைக்கு

அச்சுறுத்தலில் உரக்க ஆரவாரம் செய்பவர் அவற்றை நிறைவேற்றுவதில் பலவீனமானவர்கள்.

- சார்ல்ஸ் கோல்டன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 16-12-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

த. பெ. எண் - 05

## ரஷ்யர்களின் விருப்பு எது?

ரஷ்யாவில் இடம்பெற்ற தேர்தலானது ரஷ்யாவைப் பொறுத்து மட்டுமல்ல, சர்வதேச உலகைப் பொறுத்தும் முக்கியமானதாகும் இத்தேர்தலில் ரஷ்யர்கள் தமது நிலைப்பாட்டை உலகிற்கு தெளிவாக வெளிக் காட்டியுள்ளனர்.

கடந்த வார இறுதியில், இரு தேர்தல்களில் ரஷ்ய மக்கள் வாக்களித்தனர். ஒன்று நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை நிறுவுவது. இதற்கு 60 வீதமான மக்கள் ஆதரவாக வாக்களித்துள்ளனர் இதுவெளிப்பார்வைக்குதற்போதைய அதிபர் யெல்ட்சினுக்குக் கிடைத்த வெற்றி என்று கூறினாலும், ரஷ்யர்கள் யெல்ட்சினை விரும்பினார்களா? அன்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு பலம் பொருந்திய அதிபரை விரும்பினார்களா? என்பது கேள்விக்குரியதே ஆகும்.

ஏனெனில், இரண்டாவது தேர்தலான நாடாளுமன்றத்திற்கு இடம்பெற்ற தேர்தலில் யெல்ட்சினின் கட்சியை விட, தீவிர தேசியவாத கட்சிக்கு ரஷ்ய மக்கள் ஆதரவு அளித்துள்ளமையே இக்கேள்வியை எழுப்பக் காரணமாகின்றது அதாவது, ரஷ்யர்கள் அதிபர் யெல்ட்சினை விரும்புகிறார்கள் என்பதை விட பலமான ஒரு அரசியல்அமைப்பையும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு ஜனாதிபதியையும், உலகில் தாம் இழந்து போன வல்லரசு என்ற அந்தஸ்தையுமே விரும்புகின்றார்கள் என்பதையே தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டுபவையாக உள்ளன.

இதேவேளை, இத்தேர்தல் முடிவுகள் ரஷ்யாவில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும், பாராளுமன்றத்திற்கும் இடையில் வலுவான ஒரு மோதலை உருவாக்கவே உதவக் கூடும். அதாவது, கடந்த காலத்தில் கம்யூனிஸ்ட்டுக்கள் பெற்றிருந்த ஆதிக்கம் தீவிர தேசியவாதிகளின் கைக்கு மாறுவதால், பாராளுமன்றத்திற்கும் அதிபருக்கும் இடையில் உள்ள மோதல் நிலை தளர்ந்துவிடப் போவதில்லை.

மேலும், இத்தேர்தலில் கம்யூனிஸ்ட்டுக்களும் முற்

## பூநகரி தளம் மீதான தாக்குதல் தமிழீழத்திற்கான முதற்படி

### மன்னார் மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பூநகரி வெற்றி நாள் மடு, பள்ளமடு, முழங்காவில், பூநகரி, அடம்பன், நானாட்டான் ஆகிய இடங்களில் 11-ம்12-ம்திகதிகளில்பிரதேச மட்டத்தில்கொண்டாடப்பட்டது. 13-ம் திகதி நானாட்டான் பிரதேசத்திலுள்ள முருங்கன்பிட்டியில் மாவட்ட மட்ட பூநகரி வெற்றி நாள் சிறப்புற கொண்டாடப்பட்டது.

அன்றைய தினம் பூநகரி வரலாற்றுச் சமரில் வீரச்சாவு அடைந்த மாவீரர்களின்பெற்றோர் பாண்ட் வாத்திய இசையுடன் வெற்றித் தீபம் ஏந்திய மாணவர் அணிவகுப்புடன் அழைத்துச் செல்லப்பட்டனர்.

பின்னர் பிரதான ஈகைச் சுடரை மாவட்ட சிறப்புத் தளபதி ஜான், மாவட்ட துணைத் தளபதி நீக்கிளாஸ், மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஞானி ஆகியோர் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து மாவீரரின் பெற்றோர் தமது பிள்ளைகளின் உருவப்படங்களுக்கு ஈகைச் சுடர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து மாவீரர் பட்டியல் வாசிக்கப்பட்டதும் நானாட்டான் பிரதேசப் பொறுப்பாளர் திலகன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இப்பொதுக்கூட்டத்தில் பொதுமக்கள் சார்பில் திரு. பத்தா, திரு. சுந்தரசேனா, திரு. செல்வம் ஆகியோரும் போராளிகள் சார்பில் மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி வளர்மதி, விடத்தல்தீவு கடற்புலிகள் அரசியல் பொறுப்பாளர் சுாங்கேயன், மாவட்ட அரசியல் துணைப் பொறுப்பாளர் நந்தகுமார் ஆகியோர் உரையாற்றினர்.

நந்தகுமார் தனது உரையில் "1983-ம் ஆண்டின்பின் எமது ஆயுதப் போராட்டம் முனைப்புப் பெற்றது கடந்த பத்துவருடங்களில் நாம் நடாத்திய தாக்குதல்களில் பூநகரி வரலாற்றுச்சமர்தான் தாய் சமர். இத்தாக்குதலானது தமிழீழத்திற்கான முதற்படி" என குறிப்பிட்டார்.

## நீர்வளங்களை இனங்காண இரண்டு நாள் ஆய்வரங்கு

மீளக்குடியமர்விற்கான நீர்வளங்களை இனங்காணுதல் தொடர்பான ஆய்வரங்கொன்று நேற்று கிளிநொச்சியில் யாழ் பல்கலைக்கழக விவசாய பீடத்தில் ஆரம்பித்துள்ளது. இரண்டு அமர்வுகளாக நடைபெறவுள்ள இந்தஆய்வரங்கானது காலை 8.00 மணிமுதல் மாலை 5.15 மணிவரை நடாத்தப் படுகின்றது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப் பகுதியினரால் நீர்ப்பாசனத்திணைக்களம், யாழ் பல்கலைக்கழக விவசாய பீடம், போரூட் நிறுவனம் ஆகியவற்றை இணைத்து ஆய்வரங்கினை நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்று காலை அமர்விற்கு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. இ. தர்மகுலசிங்கமும் மாலை அமர்விற்கு மன்னார் அரசாங்க அதிபர் திரு. க. கணேஸ் அவர்களும் தலைமை தாங்கவுள்ளனர். இன்றைய தினம் "நீர்வளம் பராமரித்தல்", "வடமாகாணத்தில் நீர்முகாமைத்துவம்" ஆகிய விடயங்களின் கீழ் ஆய்வுரைகளும் நடைபெறவுள்ளன.

மாலை அமர்விலே ஆய்வரங்கு தொடர்பான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ரஷ்யாவில் வேலை பெற்றுத்தருவதாக அழைத்துச் சென்றவர் தலைமறைவு

### 34 இளைஞர்கள் மாஸ்கோவில் பரிதவிப்பு

(கொழும்பு)

ரஷ்யாவில் கொழுத்த சம்பளத்துடன் உயர் மட்டத் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி 34 இளைஞர்களிடம் பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுக் கொண்ட நபர் ஒருவர் அந்த 34 பேரையும் ரஷ்யாவில் தவிக்க விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

இவர்களில் நான்கு பேர் அங்குள்ள தமிழர் ஒருவரைச் சந்தித்தனர். இத் தமிழர் உதவி மூலம் மீண்டும் இலங்கைக்கு வந்த இவர்கள் தொழில் இலாகாவிலும் வேலை வாய்ப்பு பணியகத்திலும் முறையிட்டனர், இது தொடர்பாக பாணந்துறைப் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்

இந்த நான்கு இளைஞர்களிடமிருந்து 2, 30,000 வீதம் அறவிடப்பட்டுள்ளது இது தொடர்பாக வாதுவையைச் சேர்ந்த சரத் சில்வா தகவல் தெரிவிக்கையில், ரஷ்யாவில் பெரிய தொழில் பெற்றுத்தருவதாக ஜாஎலை ஏஜென்சி ஒன்று 34 பேரை ரஷ்யா செல்லத் தயார் செய்தது. நாங்கள் ஏஜென்சி ஆளுடன்ரஷ்யா சென்றோம். எம்மை மாஸ்கோ விமான நிலையத்தில் இருக்கச் செய்துவிட்டு எமக்குத் தொழில் தரும் இத்தாலிக் கம்பனி டைரக்டரைச் சந்திக்கச் செல்வதாகக் கூறி வெளியேறிச் சென்றார்.

அவர் வரும் வரை காத்திருந்தோம் வரவில்லை. விமான நிலைய அதிகாரிகள் எம்மை அங்கிருந்து வெளியேற்றினர் பின்னர் இலங்கைத் தமிழர் ஒருவர் எங்களைச்சந்தித்து விபரம் கேட்டு எமக்கு தங்க உதவியளித்தார். பின்னர் நாங்கள் நால்வரும் கஷ்டப்பட்டு இலங்கை வந்தோம் என்றார்.

## தொடர் கருத்தரங்குகள்

வதிவிட வேளாண்மைப் போட்டியிலே கூடுதலானவர்களை பங்கு கொள்ளச் செய்யும் நோக்கோடு யாழ். மாவட்டம் முழுவதும் தொடர் கருத்தரங்குகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பரவலாக நடாத்தி வருகின்றது.

இதன் முன்னோடிநடவடிக்கையாக கடந்த 8-ம் திகதி மாலை 2.30 மணியளவில் கொட்டடி நமசிவாயம் வித்தியாசாலைமண்டபத்திலும், மாலை 4.00 மணியளவில் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையிலும்மாலை 5.00 மணியளவில் மடம் வீதி ராகினி பாலர் பாடசாலை மண்டபத்திலும் கருத்தரங்குகள் நடைபெற்றன.

இந்த கருத்தரங்குகளில் வீட்டுத்தோட்டம், கால்நடை வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, தொடர்பான கருத்துரைகள் வழங்கப்படுவதுடன் கலந்துரையாடலும் இடம்பெறுகின்றது

இந்த கருத்தரங்குகளில் பொது மக்களுடன், கால்நடை சுகாதார உத்தியோகத்தர்கள், கிராமசேவை உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்களும் பங்கு பற்றி கலந்துரையாடி வருகின்றனர்.

## கோழிகள் விநியோகம்

ஒவ்வொரு கிராமங்கள் தோறும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களை தெரிவு செய்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துமுகமாக கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின்ஊடாக பல்வேறு உதவிகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்வழங்கிவருகின்றது.

இதன் அடிப்படையில் கரணவாய் கிழக்கிலும், கரணவாய் தெற்கிலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 10 குடும்பங்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுவினரால் ஒரு குடும்பத்திற்கு 25 கோழிகளும்மற்றும் தீவனம், உபகரணம் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

## யுத்தத்தினால் மட்டும் தீர்வுகாண முடியாது

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே. ஆர். ஜெயவர்தனவையோ அல்லது பிரேமதாசவையோ விட தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண்பார் என தான் நம்புவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான சிறிசேன குரே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: "ஜனாதிபதி எவ்வகையான தீர்வை முன்வைப்பாரென்பது எனக்குத் தெரியாது. ஆனால் வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கையினால் மட்டும் தீர்வுகாண முடியாது என்பது மட்டும் உண்மை என்பதே எனது கருத்து" என்று தெரிவித்தார்.

## சங்கீதம், நடனம் செய்முறைத்தேர்வு

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வின் சங்கீதம், நடனம், செய்முறைத்தேர்வு எதிர்வரும் 20, 21, 22, 23ஆம்திகதிகளில் நடைபெறவுள்ளதாகவும் இம்மாணவர்களின் அனுமதி அட்டைகள் கல்விக் கோட்டரீதியாக பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மாணவர்கள் அனுமதி அட்டையை தத்தமது பாடசாலை அதிபர்களிடம் பெற்று செய்முறைத் தேர்வில் தோற்றலாமென தேர்வுஆணையாளர் அறிவித்துள்ளார்.

## பொருளாதாரத்தில் முதுகலைமாணி நெறி

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக் கழகம் பொருளாதாரத்தில் முதுமாணிக் கற்கை நெறியை மேற்கொள்வதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது போதனைக்குரிய காலம் முழு

கிலமொழியிலேயே நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விரும்பியோர் விண்ணப்பங்களை ஜனவரி 14ஆம் திகதிக்குமுன் சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விவெளியீட்டுப் பிரிவு கொழும்பு பல்

ஆதரவு அளித்துள்ளமையே இக்கேள்வியை எழுப்பக் காரணமாகின்றது. அதாவது, ரஷ்யர்கள் அதிபர் யெல்ட்சினை விரும்புகிறார்கள் என்பதை விட பலமான ஒரு அரசியல்அமைப்பையும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு ஜனாதிபதியையும், உலகில் தாம் இழந்து போன வல்லரசு என்ற அந்தஸ்தையுமே விரும்புகின்றார்கள் என் பதையே தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டுபவையாக உள்ளன.

இதேவேளை, இத்தேர்தல் முடிவுகள் ரஷ்யாவில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும், பாராளுமன்றத்திற்கும் இடையில் வலுவான ஒரு மோதலை உருவாக்கவே உதவக் கூடும். அதாவது, கடந்த காலத்தில் கம்யூனிஸ்ட்டுக்கள் பெற்றிருந்த ஆதிக்கம் தீவிர தேசியவாதிகளின் கைக்கு மாறுவதால், பாராளுமன்றத்திற்கும் அதிபருக்கும் இடையில் உள்ள மோதல் நிலை தளர்ந்துவிடப் போவதில்லை.

மேலும், இத்தேர்தலில் கம்யூனிஸ்ட்டுக்களும் முற்றாக மக்களால் புறக்கணிக்கப்பட்டதாக இல்லை. மூன்றாவது பலம் பொருந்திய கட்சியாக அவர்களே உள்ளனர். அத்தோடு, முன்னாள் அதிபர் கொர்பச்சேவின் காலத்தில் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் இறங்கி தோல்வி கண்ட சில தீவிரவாத கம்யூனிஸ்ட்டுக்களும் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளமை ரஷ்ய மக்கள் தமது சர்வதேச அந்தஸ்து பற்றித் தீவிரமாகவே சிந்திப்பதையேகாட்டுகின்றது.

இந்நிலையில், ரஷ்யாவின் எதிர்காலம் குழப்பங்களும், நெருக்கடிகளும் நிறைந்ததாகவே காணப்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. இதில் யெல்ட்சின் தனக்குக் கிடைக்கப் பெற்றுள்ள அரசியல் அமைப்பு மூலமான அதிகாரத்தைப் பயன்படுத்துவாரா? அன்றி பாராளுமன்றத்தில், பெரும்பான்மை பலம் பெறும் தேசியவாதிகள் அதிபர் யெல்ட்சினை பதவி விலகக் கோரி போராட்டங்களை ஆரம்பிப்பார்களா என்பதைத் தற்பொழுது திட்டவட்டமாகக் கூற முடியாது இருப்பினும் ரஷ்யா ஒரு பெரும் உள்நாட்டு நெருக்கடியை நோக்கிச் சென்று கொண்டிருப்பது என்பதே உண்மையாகும்.

இதேவேளை, ரஷ்யப் பாராளுமன்றத்தில் தீவிர தேசியவாதிகளின் வெற்றியானது, மேற்குலகைப் பொறுத்து அதிர்ச்சி அளிக்கும் ஒன்றாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. சிதைந்து போன சோவியத் சாம்ராச்சியத்தை கட்டி எழுப்ப தேசியவாதிகளினால் முடியுமா? முடியாதா? என்பது ஒருபுறம் இருக்க ரஷ்யாவை தம் விருப்பத்தின் பேரில் மேற்குலகால் கொண்டு செல்ல முடியுமா? என்பதே மேற்குலகிற்கு இன்றுள்ள பிரச்சினையாகும்.

ஆனால், இதில் எது எவ்வாறு நடப்பினும் தேர்தல் முடிவுகள் ரஷ்யர்கள் தமது வல்லாதிக்கத்தை இழந்ததையிட்டு மனம் வெதும்புவதையே காட்டுகின்றன. இதன் காரணமாக உள்நாட்டில் பெரும் கொந்தளிப்பு ஏற்படினும், தமது விருப்பத்தை வெளிப்படையாகவே ரஷ்யர்கள் தெரிவித்துவிட்டனர். இதன் வெளிப்பாடு உள்நாட்டிற்கு வெளியிலும் பல தாக்கங்களை ஏற்படுத்தக் கூடும். ஆனால், உள்நாட்டில் யார் வெற்றி பெறுகின்றார்கள் என்பதைப் பொறுத்தே வெளியுலக அரசியல் தீர்மானிக்கப்படும். இதில், இராணுவத்தின் உதவியுடன் தேசியவாதிகள் வெற்றி பெறுவார்களேயானால் - இராணுவத்தில் அநேகர் தேசியவாதிகளுக்கே வாக்களித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது - உலகில் மீண்டும் ஒரு கெடுபிடிப் போர் நிலை உருவாகிலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# அழைத்துச் சென்றவர் தலைமறைவு

## 34 இளைஞர்கள் மாஸ்கோவில் பரிதவிப்பு

(கொழும்பு)

ரஷ்யாவில் கொழுத்த சம்பளத்துடன் உயர் மட்டத் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி 34 இளைஞர்களிடம் பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுக் கொண்ட நபர் ஒருவர் அந்த 34 பேரையும் ரஷ்யாவில் தவிக்க விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

இவர்களில் நான்கு பேர் அங்குள்ள தமிழர் ஒருவரைச் சந்தித்தனர். இத் தமிழர் உதவி மூலம் மீண்டும் இலங்கைக்கு வந்த இவர்கள் தொழில் இலாகாவிலும் வேலை வாய்ப்பு பணியகத்திலும் முறையிட்டனர், இது தொடர்பாக பாணந்துறைப் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்

இந்த நான்கு இளைஞர்களிடமிருந்து 2, 30,000 வீதம் அறவிடப்பட்டுள்ளது இது தொடர்பாக வாதுவையைச் சேர்ந்த சரத் சில்வா தகவல் தெரிவிக்கையில், ரஷ்யாவில் பெரிய தொழில் பெற்றுத்தருவதாக ஜாஎலை ஏஜென்சி ஒன்று 34 பேரை ரஷ்யா செல்லத் தயார் செய்தது. நாங்கள் ஏஜென்சி ஆளுடன்ரஷ்யா சென்றோம். எம்மை மாஸ்கோ விமான நிலையத்தில் இருக்கச்செய்து விட்டு எமக்குத் தொழில் தரும் இத்தாலிக் கம்பனி டைரக்டரைச் சந்திக்கச் செல்வதாகக் கூறி வெளியேறிச் சென்றார்.

அவர் வரும் வரை காத்திருந்தோம் வரவில்லை. விமான நிலைய அதிகாரிகள் எம்மை அங்கிருந்து வெளியேற்றினர் பின்னர் இலங்கைத் தமிழர் ஒருவர் எங்களைச்சந்தித்து விபரம் கேட்டு எமக்கு தங்க உதவியளித்தார். பின்னர் நாங்கள் நால்வரும் கஷ்டப்பட்டு இலங்கை வந்தோம் என்றார்.

# யாழ் குடாவில்சேவையாற்ற டாக்டர்கள் பின்னடிப்பு

## அமைச்சர் ரேணுகா தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் கடமையாற்ற டாக்டர்கள் செல்லத் தயங்குகிறார்கள் என சுகாதார அமைச்சர் ரேணுகா கேரத் தெரிவித்துள்ளார்.

சுகாதார மகளிர் விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் இறுதியில் பதிலளித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் யாழ். குடாநாட்டில் நோயாளரின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது உண்மையே ஆனால் அங்கு சென்று சிகிச்சையளிக்க வைத்திய நிபுணர்கள் தயாராக இல்லை. யாழ்ப்பாண நிபுணர்கள் கூட அங்கு போகத் தயங்குகிறார்கள் போகத் தயாராக இருப்போரை அனுப்ப நாம் தயாராகவே இருக்கிறோம்.

யுத்தத்தில் காயப்படுவோருக்கு சிகிச்சையளிப்பதில் பாரபட்சம் காட்டப்படுவதில்லை. யார் காயப்பட்டது எப்படிக் காயமேற்பட்டது என்பதை டாக்டர்கள் அறிய விரும்புவதில்லை. காயப்பட்டோருக்கு உடன் சிகிச்சை அளிப்பதே அவர்களது நோக்கம் என்றார்.

# பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

தி. பன்னீர்செல்வம் என்பவரால் கைப்பை ஒன்று மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கும் சந்திக்கும் இடையில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (சிறு தொகைப் பணத்துடன்) உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

# சிப்பாய்கள் துன்பப்படுகையில் ரூபவாகினியில் கிரிக்கட்

## விமலரட்ண தேரோ கண்டனம்

(கொழும்பு)

''பூநகரி யுத்தத்தில் படைமுகாமை இழந்து பல நூறு சிப்பாய்களை இழந்து, ஆயுதங்களைப் பறிகொடுத்துவிட்டு புலிகளிடம் இருந்து தப்பிக்க எமது சகோதர சிப்பாய்கள் ஓட்டமெடுத்து அல்லலுறும் வேளையில் சிறிலங்கா அரசு வெகுஜன தொடர்பு சாதனமான ரூபவாஹினியில் உள்நாட்டு வெளிநாட்டு கிரிக்கெட் போட்டிகளை ஒளிப்பரபினார்கள்''

இவ்வாறு பெல்லன்வில விமலரட்ணதேரர் சிறிலங்கா அரசை வன்மையாகக் கண்டித்துள்ளார். மிக ஆவேசமாக அவர் ஆற்றிய உரையில் ''ரோமாபுரி எரிகையில் நீரோ மன்னன் பிடில் வாசித்தானாம். இப்படித்தான் இங்கு டி. பியின் ஆட்சியும் இருக்கின்றது'' எனக் குறிப்பிட்டார்.

# மரக்கன்றுகள் இலவசம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் காடு வளர்ப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும் பொருட்டு 25 11.1993-ம் திகதி ஆனைக்கோட்டை பிரதேசத்தில் காக்கைத்தீவுப் பகுதியில் வசிக்கும் நாற்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வீடுகளில் நாட்டுவதற்கென வேம்பு, புளி, நாவல் போன்ற மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன. மேலும் நாட்டப்படும் மரக்கன்றுகளுக்கு பாதுகாப்புக் கூடுகள் அமைப்பதற்கும் பனைமட்டைகளும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

# விஞ்ஞான வினா விடை போட்டிகள் ஜனவரியில்

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் நடாத்தவுள்ள பாடசாலை விஞ்ஞான நிகழ்ச்சி அடுத்த ஜனவரி 14இல் யாழ் இந்துமகளிர்கல்லூரியில் நடைபெறவுள்ளது. விஞ்ஞான வினா விடை போட்டி ஆகியன நடைபெற்று பரிசுகள்வழங்கப்படவுள்ளன. இப் போட்டியில் சேரவுள்ள கல்லூரிகள் தனது விண்ணப்பங்களை யாழ். விஞ்ஞானச் சங்கம், யாழ். பல்கலைக்கழகம் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்' என மேற்படி சங்கம்கேட்டுள்ளது.

# றுகுணுவில் உரம்

யாழ்ப்பாணம் செல்லும் 125 பயணிகளை ஏற்றிக் கொண்டு பயணிகள் கப்பல் ஒன்று இன்று திருமலை துறைமுகத்திலிருந்து புறப்படும் என தெரியவருகிறது

அத்துடன் றுகுணு என்ற கப்பல் வடபகுதிக்கான உரவகைகளை ஏற்றிக்கொண்டு இவ்வார இறுதியில் பருத்தித்துறைக்கு வரும்எனவும் அறிவிக்கப்படுகிறது.

குரே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: ''ஜனாதிபதி எவ்வகையான தீர்வை முன்வைப்பாரென்பது எனக்குத் தெரியாது. ஆனால் வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கையினால் மட்டும் தீர்வுகாண முடியாது என்பது மட்டும் உண்மை என்பதே

மதி அட்டைகள் கல்விக்கோட்டரீதியாக பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மாணவர்கள் அனுமதி அட்டையை தத்தமது பாடசாலை அதிபர்களிடம் பெற்று செய்முறைத் தேர்வில் தோற்றலாமென தேர்வுஆணையாளர் அறிவித்துள்ளார்.

# பொருளாதாரத்தில் முதுகலைமாணி நெறி

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக் கழகம் பொருளாதாரத்தில் முதுமாணிக் கற்கை நெறியை மேற்கொள்வதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது போதனைக்குரிய காலம் முழுநேரக்கற்கையின் ஒருவருடமும் பகுதிநேர கற்கையாயின் இரு வருடங்களும் எடுக்கும் எனவும் போதனைகள் ஆங்கில மொழியிலேயே நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விரும்பியோர் விண்ணப்பங்களை ஜனவரி 14ஆம் திகதிக்குமுன் சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விவெளியீட்டுப் பிரிவு கொழும்பு பல்கலைக் கழகம் கொழும்பு-3 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# சங்கீத, நடன ஆசிரியர்கள் நாளை சமுகம் தரவும்

கல்விக்கோட்டரீதியாக தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வின் சங்கீதம், நடனம், செய்முறைத் தேர்வு நடாத்துவது சம்பந்தமாக கலந்துரையாடவிருப்பதால் சகல நடன ஆசிரியர்களையும், நாளை வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு யாழ்,கல்வித்திணைக்களத்திற்கும், சங்கீத ஆசிரியர்களை நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு வேலணை, யாழ்ப்பாணக் கோட்ட ஆசிரியர்களை யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கும் தென்மராட்சிக் கோட்ட ஆசிரியர்களை யா / றிபேக் கல்லூரிக்கும், வடமராட்சிக் கோட்ட ஆசிரியர்களை வட இந்துமகளிர் கல்லூரிக்கும் மருதனார்மடக் கோட்ட ஆசிரியர்களை யா- இராமநாதன் கல்லூரிக்கும், பண்டத்தரிப்புக் கோட்ட ஆசிரியர்களை மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் தவறாது வருகை தரும்படி சங்கீத உதவிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# விண்ணப்பிக்கலாம்

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், தையல் பயிற்சி போதனாசிரியர் ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளது.

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் ஜனவரி 7ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படவேண்டுமென கேட்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விபரங்களையும் மாதிரிவிண்ணப்பப்படிவத்தையும் யாழ். செயலககிராம அபிவிருத்திக்கிளையிலோ ஈழநாதம் காரியாலயத்திலோபார்வையிடலாம்

இவற்றுக்கான ஆகக்குறைந்த தகைமைகள் க. பொ. த. (சா. த) பரீட்சை, தேசிய கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சைகளில் தமிழ், கணிதம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களில் சித்தி ஆகும். (சி)

# மீண்டும் நூலக சேவை

கலவியங்காடு தமிழ்த்தாய் மன்றத்தின் தமிழ்த்தாய் நூலகசேவை மீண்டும் வரும் முதலாம்திகதிமுதல் வழமை போல் இயங்கவுள்ளது என இதன் அமைப்பாளர் அறிவிக்கிறார்.

**கண்ணை இமை காக்கும்**
**மண்ணை மரம் காக்கும்**

## நெஞ்சை விட்டகலா
# ஓராண்டு நிறைவில்



தமிழ்த் தாயின்
மடியில்:

23 - 03 - 65

தமிழீழத்தாயின்
அணைப்பில்

16 - 12 - 92

## லெப. சிற்றம்பலம்/அப்துல்லா
(நடராசா சந்திரகுமார் திருமலை)

இனவாத அரசின் வெறியாட்டங்களை
இல்லாமல் ஒழித்து - இனிய தொரு
தமிழீழத்தை கட்டியெழுப்புவதற்கு
தன்மான வீரனாய் களமாடி
அளவெட்டியில் காவியமான - நாயகனே
அப்துல்லா என உனை அழைக்க
அடுத்த பிறவியை எதிர்பார்த்து
தினம் உனக்காய் ஏங்குகின்றோம்.


கிருஸ்ணர் கோவிலடி, என்றும் உன் நினைவுகளுடன்
கோப்பாய் வடக்கு, சந்திரபோஸ் குடும்பத்தினர்.
கோப்பாய். (சி-8134)

# ஆண்டு ஒன்றில்
## அலை மோதும் நினைவுகள்....!
## லெப். சிற்றம்பலம் (அப்துல்லா)
(நடராசா சந்திரகுமார்)
(தம்பலகாமம், திருக்கோணமலை)

திருமலை தந்திட்ட விடுதலைப் புலியிவன்
எரிமலையாகவே எழுந்திட்ட சுடரிவன்
தமிழின விடியலில் தலைவனின் வழியினில்
தனக்கென ஓரிடம் தானாய் வகுத்தவன்
சிரிப்பொடு பேச்சும் சிறந்த நல் உள்ளமும்
கொடுத்திடும் வேலையை முடித்திடும் ஆற்றலும்
அன்பும் பண்பும் அமைந்திடப்பெற்ற
அப்துல்லா உன்னை அன்போடு நினைக்கின்றோம்

உன் நினைவுடன் வாழும்
அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு
அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு, மக்கள்
வாதரவத்தை, புத்தூர் (6903)

## விண்ணக வாழ்வில்
# 5ஆண்டு நினைவலைகள்



## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 15 - 12 - 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11706

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம் இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

28-3528, 24-6336, 24-0207. 22-9193, 28-6623, 26 4139, 26-2764, 26-3937, 26.3628, 42-8316, 42-6157, 41-2151, 27-6415, 28-1686, 24-9390, 27-9833, 24-9854, 26-7949, 26-1724, 24-8429, 26-1098, 42-7312, 41,8068, 43-1062, 43-6007.

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்- வரைவுள்ளது
# விசேட பொதுச் சபைக் கூட்டம் - 18-12-1993
### சனிக்கிழமை காலை 10-00 மணி

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் 18-12-93 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு சங்கத் தலைவர் திரு. சொல மன் சூ. சிறில் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. சங்க உத்தியோகபூர்வ அறிவித்தல்கள், நிகழ்ச்சி நிரல், சகல பொதுச் சபை உறுப்பினர்களுக்கும் ஏக காலத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வறிவித்தல்களையும் தங்களது மேலான கவனத்திற்கு அறியத்தருகிறோம்.

நன்றி

கூட்டுறவுச் சேவையில்

திரு. த. பரஞ்சோதி
பதில் பொது முகாமையாளர்
291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
15-12-1993

திருமதி பு. நவரட்ணம்
செயலாளர்

(சி/8140)

## உங்களுக்காக
# பணமும் பரிசில்களும்

ஜாம், பியர், கோடியல், நெல்லி, புறேடினேக்ஸ் ஆகியவற்றில் ஏதாவது 5 போத்தல்களை ஒப்படைத்து பணத்தைப் பெறுவதுடன் ஒரு அதிர்ஷ்ட லாப சீட்டையும் பெற்றுக் கொள்ளுங்கள். மாத முடிவில் உங்களில் 40 பேருக்கு பரிசில்கள் காத்திருக்கின்றன.

பின்வரும் கடைகளில் போத்தல்களைஒப்படைத்து அதிர்ஷ்ட லாப சீட்டையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

1. ஸ்கந்தா மாஸ்ரர்-வட்டுக்கோட்டை 2. கந்தசாமி அன் சன்ஸ்- சங்கானை 3. லிங்கம் கூல்பார் மானிப்பாய் 4. சபாரிஸ்- சுண்டுக்குளி 5. பேப்பர் சொப்- இருபாலை 6. சுபாஸ் பேக்கவுஸ்- நெல்லியடி 7. பீடாசொப் உடுப்பிட்டி 8. செல்வராசா ஸ்ரோர்ஸ்-பருத்தித்துறை 9. மாருதி- வல்வெட்டித்துறை 10. அறிவகம்- சாவகச்சேரி 11. வாசுகி ஸ்ரோர்ஸ்- சுண்டுக்குளி 12. நியூ வசந்தா- சின்னக் கடை 13. லங்கா பதி- மல்லாகம் 14. தாஸ் ஸ்ரோஸ்- திருநெல்வேலி 15. விநாயகர்- கல்வியங்காடு 16, ஜெயசக்தி பார்மஸி- மருதனார்மடம் 17. யாஸ்ரன் ஸ்ரோஸ்- கொக்குவில் 18. சோதிடா புத்தக நிலையம்- இணுவில் 19 கபில் உணவகம்- [illegible]

# பயணியை தாக்கிவிட்டு உடைமைகள் கொள்ளை
### கிளிநொச்சியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
சவூதி அரேபியாவில் இரு வருடங்கள் தொழில் புரிந்த பின் நாடு திரும்பிய ஒருவர் கிளாலிக் கடற்பகுதியைக் கடப்பதற்காக வந்துகொண்டிருக்கையில் கொள்ளையரிடம்சிக்கி வாள்வெட்டுக்கு இலக்காகி தமது உடைமைகளையும் பறிகொடுத்துள்ள சம்பவம்ஒன்று கடந்த 11ஆம் திகதி இரவு8-30 மணியளவில் குஞ்சுப்பரந்தனில் நடைபெற்றுள்ளது.

பருத்தித்துறையிலுள்ள தும்பளை எனும் இடத்தைச் சேர்ந்த ஒருபிள்ளையின் தந்தையான சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் (வயது38) என்பவரே இச்சம்பவத்தில் காயமடைந்ததுடன் உடைமைகளையும் பறிகொடுத்தவராவார்.

ஓமந்தையிலிருந்துதனியார் மோட்டார் சைக்கிள் மூலம் பூநகரிநோக்கி வந்து கொண்டிருந்த போது குஞ்சுப்பரந்தன் பகுதியில் இவர்களைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவர்களை மடக்கிப் பயமுறுத்தியுள்ளனர்.

நிலைமையைப் புரிந்து கொண்ட சிவசுப்பிரமணியம் அவர்களில் ஒருவரைத் தாக்கியுள்ளார். தொடர்ந்து இவர்களுக்கிடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. சிறிது நேரத்தில் அப்பகுதியில் மற்றொரு மோட்டார் சைக்கிள் வெளிச்சம் தெரியவே கொள்ளையர் தாம் கொண்டுவந்த வாளினால் இவரது நெற்றியில் வெட்டிவிட்டு அவர் கொண்டு வந்தபையை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

காயமடைந்த இவர் தற்போது கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

### தொழிலாளர்

உறுதிமொழிகளோ உடன்பாடுகளோ பரிமாறிக் கொள்ளப்படவில்லை எனவும் எனினும் தொழிலாளர் பிரச்சினை குறித்து எவருடன் பேசினாலும் அதனை எவரும் தவறென கூறமுடியாது என அவர் கூறினார்.

### பிரேமாவின்

சுதந்திரத்தின் பின்னர் நாம் சந்தித்துள்ள மிகப் பாரிய இழப்பு பூநகரியில் ஏற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் உச்சக்கட்ட தாக்குதல் அங்கு நடைபெற்றுள்ளது. எமது இளைஞர்கள் 1000பேர் இத்தாக்குதலில் பலியாகி உள்ளனர். இது இறுதியான தாக்குதல் என கொள்ளமுடியாது. எதிர்காலத்தில் இதை விட மோசமான தாக்குதல் நடைபெறப்போகின்றது என்பதையே இது காட்டுகிறது.

இந்திய இராணுவத்தை திருப்பி அனுப்பியதன் பிரதிபலிப்பே இது. இந்திய இராணுவத்தினர் திருப்பி அனுப்பப்பட்ட பின்னர் இந்த நாட்டின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், ஜனாதிபதி, லெப்டினன்ட் ஜெனரல்கள், கேணல்கள், கப்டன்கள் என எல்லா தரத்தினரும் கொல்லப்பட்டனர்.

இந் நிலைக்கு பிரேமதாசவே காரணம். இன்று விடுதலைப் புலிகள் பாரிய கெரில்லாஅணியாக வளர்ந்து விட்டனர் என காமினி திசநாயக்கா ஞாயிறு லங்காதீப பத்திரிகைக்கு மேலும் தெரிவித்தார்.

### அமைதிப்படை

ஆனால் புலிகளுக்கு எதிராக அரசுக்கு ஆதரவு தெரிவித்து வரும் மட்டக்களப்பில் உள்ள தமிழ்க்குழுக்கள் இந் நிலைப்பாடு குறித்துசந்தேகம் தெரிவிக்கின்றன. இவ்வாறு ஐலண்ட் மேலும் குறிப்பிட்டுள்ளது.

### சிறிமா

ரம் நசுக்கப்பட்டது. பல பத்திரிகைகள் மூடப்பட்டன அல் [illegible]

### இனப்

எதிர்காலம் கேள்விக்குரிய ஒன்றாக மாறியுள்ளது. நாட்டின் வருமானத்தின் கால்ப் பங்கை யுத்தத்திற்கு செலவிட வேண்டிய நிலை உள்ளது. இத் தொகை மேலும் அதிகரிக்குமே தவிர குறையக் கூடிய சந்தர்ப்பம் இல்லை. தனியாக சிங்களக் கட்சிகளோ, சிங்கள மக்களோ இதற்கு தீர்வுகாணமுடியாது. ஏனெனில் தமிழ் மக்களின் பங்களிப்பு மிக அவசியமானது என்பதனை சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்.

## உதைபந்தாட்டம்

குருநகர் புனித யாகப்பர் ஆலய புனர்நிர்மாண நிதிக்காக பாடும்மீன் விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில்நடைபெற்றுவருகிறது

இன்று மாலை 3-00 மணிக்கு ஆரம்பமாகும் போட்டியில் கென்றிஸ் எதிர் பாடும் மீனும், 4-00 மணிக்கு ஆரம்பமாகும் போட்டியில் ஞான முருகன் எதிர் ஸ்கந்தாவும் மோதுகின்றன.

## ஒப்பந்தம்

வட அயர்லாந்துப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் இங்கிலாந்தும், அயர்லாந்தும் ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

இங்கிலாந்துப் பிரதமர் யோண் மேஜரும், அயர்லாந்துப் பிரதமர் அல்பேட் ரெலைட்டும் இந்த ஒப்பந்தத்தில் நேற்று லண்டனில் கைச்சாத்திட்டனர்.

### பிரதேச

வும் தெரிவித்தார். ஒவ்வொரு தேசிய பாடசாலையிலும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகளை நடாத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒவ்வொரு பாடசாலைக்கும் கலைத்துறை ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர். அழகியல் கலை போதிக்கும் ஆசிரியர்களுக்காக தனிப்பட்ட கல்விப்பீடம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

தொடர்பு சாதனதுறையில் தற்பொழுது பெருமளவு ஆர்வம் காணப்படுகிறது. எனவே இது தொடர்பான பாடத்தில் பட்டப்படிப்பு பாடநெறிகளை தயாரிக்க இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

### உயர்கல்வி

டியும் ஏகப்பட்ட மரியாதையும் அதேசமயம் கேள்விக்கு ஏற்ற அளவு வளங்களும் இல்லாத இலங்கையில் இப்புதிய பதவி யாரும் எதிர்பார்ப்பதை விட கஷ்டமானதே என இது குறித்து கருத்து வெளியிட்ட பி. பி. ஸி தெரிவித்தது.

### ஐரோப்பிய

ஸ்பெயின், பெல்ஜியம், பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து, போத்துக்கல், ஜேர்மனி ஆகியநாடுகளின் பிரதிநிதிகள் இத் தூதுக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

(தம்பலகாமம், திருக்கோணமலை)


திருமலை தந்திட்ட விடுதலைப் புலியிவன்
எரிமலையாகவே எழுந்திட்ட சுடரிவன்
தமிழின விடியலில் தலைவனின் வழியினில்
தனக்கென ஓரிடம் தானாய் வகுத்தவன்
சிரிப்பொடு பேச்சும் சிறந்த நல் உள்ளமும்
கொடுத்திடும் வேலையை முடித்திடும் ஆற்றலும்
அன்பும் பண்பும் அமைந்திடப்பெற்ற
அப்துல்லா உன்னை அன்போடு நினைக்கின்றோம்

உன் நினைவுடன் வாழும்
அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு
அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு, மக்கள்
வாதரவத்தை, புத்தூர் (6903)

---

## விண்ணக வாழ்வில்

# 5ஆண்டு நினைவலைகள்



## கனகரத்தினம் மஞ்சுளாதேவி

ஆண்டவன் படைப்பு: 07-04-1968 அரக்கர் அழிப்பு: 16-12-1988

ஆசைமகளே அன்புச் செல்வமே
பாசமிகு சகோதரர்களை விட்டு
எங்கு சென்றாய் மஞ்சு
நாட்டிற்காக உழைக்க வெளிக்கிட்ட நீ
அரக்கர் கூட்டத்தின் மத்தியில் சயனைட் அருந்தி
உன் உயிரை மாய்த்தாய்
ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
ஆறாது எம் துயரம்
எம் உயிர் உள்ளவரை உன் புன்னகை பூத்த முகம்
எங்கள் இதயத்தில் நிலைக்கும்

உன் பிரிவால் வாடும்
அல்வாய் வடக்கு, தாய், சகோதரர், மாமா, மாமி,
அல்வாய், மச்சாள்மார், மச்சான்மார், உற்றார்,
நாவலடி. உறவினர், சினேகிதி, சினேகிதர்,
(6905)

---

# பணமும் பரிசில்களும்

ஜாம், பியர், கோடியல், நெல்லி, புறேடினேக்ஸ் ஆகியவற்றில் ஏதாவது 5 போத்தல்களை ஒப்படைத்து பணத்தைப் பெறுவதுடன் ஒரு அதிர்ஷ்ட லாப சீட்டையும் பெற்றுக் கொள்ளுங்கள். மாத முடிவில் உங்களில் 40 பேருக்கு பரிசில்கள் காத்திருக்கின்றன.

பின்வரும் கடைகளில் போத்தல்களைஒப்படைத்து அதிர்ஷ்ட லாப சீட்டையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

1. ஸ்கந்தா மாஸ்ரர்-வட்டுக்கோட்டை 2. கந்தசாமி அன் சன்ஸ்- சங்கானை 3. லிங்கம் கூல்பார் மானிப்பாய் 4. சபாரிஸ்- சுண்டுக்குளி 5. பேப்பர் சொப்- இருபாலை 6. சுபாஸ் பேக்கவுஸ்- நெல்லியடி 7. பீடாசொப் உடுப்பிட்டி 8. செல்வராசா ஸ்ரோர்ஸ்-பருத்தித்துறை 9. மாருதி- வல்வெட்டித்துறை 10. அறிவகம்- சாவகச்சேரி 11. வாசுகி ஸ்ரோர்ஸ்- சுண்டுக்குளி 12. நியூ வசந்தா- சின்னக் கடை 13. லங்கா பதி- மல்லாகம் 14. தாஸ் ஸ்ரோஸ்- திருநெல்வேலி 15. விநாயகர்- கல்வியங்காடு 16, ஜெயசக்தி பார்மஸி- மருதனார்மடம் 17. யாஸ்ரன் ஸ்ரோஸ்- கொக்குவில் 18. சோதிடா புத்தக நிலையம்- இணுவில் 19 கபில் உணவகம்- பளை 20. S. R. மகேந்திரன் ஸ்ரோஸ்- கோண்டாவில் 21. அம்பிகை வர்த்தக நிலையம்- திருநெல்வேலி 22. சிறிமேகலா- சுன்னாகம் 23. பேரம்பலம் அன் சன்ஸ்- சுன்னாகம் 24. நிதினி ஸ்ரோஸ்- சுன்னாகம்.

- ஒவ்வொரு மாத முடிவிலும் 40 பரிசில்கள் காத்துக் கொண்டு இருக்கின்றன.
- பரிசு பெற்றோர் விபரம் தபால் மூலமாகவும், பத்திரிகை மூலமாகவும் அறிவிக்கப்படும்.

**Taste Line Industries (PVT) LTD.**
**14, Seeniar Lane, Jaffna.**
(சி-8132)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## *A/L* 93-ல் பரீட்சை எடுத்த மாணவருக்கான

# DAY CLASS

## ஆரம்பம்

பொருளியல் : திரு. க. கலாகரன்
கணக்கியல் ; திரு. S. K. பிரபாகரன்
வர்த்தகம் : திரு. தி. வரதன்
அளவையியல்: திரு. A. பிரபாகரன்
இந்து நாகரிகம்: பிரபல ஆசிரியர்

ஏனைய பாடங்களும் நடைபெறும்.

குறிப்பு: (1) DAY CLASSக்கான சகல பாடங்களும் தூர இட மாணவர்களின் நலன்கருதி திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி நான்கு நாட்களில் நடைபெறும்.
(2) வாரத்தில் ஒவ்வொரு பாடமும் ஆறு மணித்தியாலங்களுக்கு குறையாமல் நடைபெறும்.
(3) அனுமதிகளுக்கு முன்கூட்டியே தொடர்பு செய்க.

(சி-8121)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

எல்லா தரத்தினரும் கொல்லப்பட்டனர்.

இந் நிலைக்கு பிரேமதாசவே காரணம். இன்று விடுதலைப் புலிகள் பாரிய கெரில்லா அணியாக வளர்ந்து விட்டனர் என காமினி திசநாயக்கா ஞாயிறு லங்காதீப பத்திரிகைக்கு மேலும் தெரிவித்தார்.

### அமைதிப்படை

ஆனால் புலிகளுக்கு எதிராக அரசுக்கு ஆதரவு தெரிவித்து வரும் மட்டக்களப்பில் உள்ள தமிழ்க்குழுக்கள் இந் நிலைப்பாடு குறித்துசந்தேகம் தெரிவிக்கின்றன. இவ்வாறு ஐலண்ட் மேலும் குறிப்பிட்டுள்ளது.

### சிறிமா

ரம் நசுக்கப்பட்டது. பல பத்திரிகைகள் மூடப்பட்டன அல்லது தடை செய்யப்பட்டன. மற்றவை அரச கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. ஐ. தே. க கூட்டங்கள் தடை செய்யப்பட்டன. கோவிலில் கூட ஐந்து பேருக்கு மேல் கூடி நிற்க அனுமதி வழங்கப்படவில்லை என்றார்.

### தமிழீழ

வேண்டும். வீதியில் பாவிக்கப்படுவதாயின் 1993-ம் ஆண்டிற்குரிய வரி அட்டையினை பெற்றிருத்தல் வேண்டும். 24-12-93 முதல் இலக்கத்தகடு, வரி அட்டையின்றி ஊர்திகளை வீதியில் பாவிப்பவர்கள் மீது தமிழீழ காவல் துறையினர் சட்ட நடவடிக்கை மேற்கொள்வர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

---

# COMPUTER
# கல்வி

**Basic Language**
சனி, ஞாயிறு
வகுப்புகள்
ஆரம்பம்: 18-12-93
2.00 மணி

**LOTUS 1-2-3**
செவ்வாய், வியாழன்
வகுப்புகள்
ஆரம்பம்: 21-12-93
8.30 மணி

**CIMA, IAB,**
**Short - Hand &**
**Typing** வகுப்புகளும்
ஆரம்பமாகின்றன

உறுதியான
கல்வியைப் பெற
**School Of Business Administration**
16, 3rd Cross Street,
JAFFNA. (சி-8136)

---

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

### இனப்

எதிர்காலம் கேள்விக்குரிய ஒன்றாக மாறியுள்ளது. நாட்டின் வருமானத்தின் கால்ப் பங்கை யுத்தத்திற்கு செலவிட வேண்டிய நிலை உள்ளது. இத் தொகை மேலும் அதிகரிக்குமே தவிர குறையக் கூடிய சந்தர்ப்பம் இல்லை. தனியாக சிங்களக் கட்சிகளோ, சிங்கள மக்களோ இதற்கு தீர்வுகாணமுடியாது. ஏனெனில் தமிழ் மக்களின் பங்களிப்பு மிக அவசியமானது என்பதனை சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்.

பாடத்தில் பட்டப்படிப்பு பாடநெறிகளை தயாரிக்க இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

### உயர்கல்வி

டியும் ஏகப்பட்ட மரியாதையும் அதேசமயம் கேள்விக்கு ஏற்ற அளவு வளங்களும் இல்லாத இலங்கையில் இப்புதிய பதவி யாரும் எதிர்பார்ப்பதை விட கஷ்டமானதே என இது குறித்து கருத்து வெளியிட்ட பி. பி. ஸி தெரிவித்தது.

### ஐரோப்பிய

ஸ்பெயின், பெல்ஜியம், பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து, போத்துக்கல், ஜேர்மனி ஆகியநாடுகளின் பிரதிநிதிகள் இத் தூதுக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

---

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# வரவு செலவுத் திட்டம்

## 1994

1994ஆம் ஆண்டிற்குக் கிடைக்கக்கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும், உத்தேச செலவீன விபரங்களையும் உள்ளடக்கிய யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் வரவு செலவுத்திட்டம் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ஆம் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் (252) (212, (பி) பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர அலுவலகம், மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம்.
14-12-1993. (சி/8143)

---

தென்னிந்தியத் திருச்சபை
யாழ். பேராலயம்
பெண்கள் ஒன்றியம்
தொழிற் பயிற்சி நிலையம் மானிப்பாய்

# கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்

இடம்: தொழிற் பயிற்சி நிலையம், கிறீன் வைத்திய சாலை வளவு, மானிப்பாய்.
காலம்: 16-12-93 வியாழன் மாலை 3-00 மணி முதல்
சிறப்பு விருந்தினர்; பேரருட் திரு. D. J. அம்பலவாணர்
டாக்டர் திருமதி C. அம்பலவாணர்

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

முக்கிய குறிப்பு:
தையல்வேலை, தலை அலங்காரம், சமையற்கலை, கைப்பணி ஆகியவற்றில் ஆறு மாத இலவச டிப்ளோமா பயிற்சி நெறியின் புதிய வகுப்புகள் ஜனவரியில் ஆரம்பமாகின்றன. சேர விரும்பும் பெண்கள் இன்றும் நாளையும் மேற்படி நிலையத்தில் தம்மைப் பதிவுசெய்து கொள்ளவும்.

செயலாளர் பெண்கள் ஒன்றியம்
யாழ். பேராலயம்
(சி-8142) தென்னிந்தியத் திருச்சபை.